முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 948

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.05.2022, புதன்கிழமை

1. அறமெனும் சக்தியே அரங்கா
ஆற்றல்மிக்க ஞானியே தேசிகா
வரமென உன்வழி ஆறுமுகன் யான்
வையகத்தை காக்கும் சக்தியாக இருக்க
2. இருக்கவே அரங்கன் உந்தனுக்கு
இயம்பிடுவேன் ஞான அறிவுரை ஆசி இனிதே சுபகிருது தகர்திங்களில்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 21ம் நாள், 04.05.2022 புதன்கிழமை)
கருத்தாக அரங்கனின் கொள்கைகள் அனைத்தும்
கலியுகத்தை மீட்டு காத்தருளும்
3. அருளாக அரங்கன் தருகின்ற அனைத்து உபதேசங்களும்
வரமாக மக்களிடை தஞ்சமடைய வையகமே ஞானவான்களை கொண்டு
கொண்டுமே இந்த கலியுகம் குறைகள் இடர்கள் அனைத்தும் களைந்து
தொண்டு வழி உலகோர் சிறந்து தேசிகன் வழிவழி சீடர்பெருமக்களாக
4. ஆகவே உலகத்தில் வளர்ந்து
அறிவிப்பேன் இந்த உலகம் ஞானவான்கள் புடைசூழ
தடையற ஞானிகள் ஆட்சிகொண்ட
தாமுரைப்பேன் ஆறுமுகன் என் தயவுக்கு வர நேரும்
5. நேர்மைகொண்டு அரங்கன் தர்மத்தை
நிலவுலகோர் கடைபிடித்து வர
வறுமை விலகும் வையகம் வளமுறும்
வளர்ச்சியான ஆளுமைகள் பெருகி இந்தபேருலகம் ஞான ஆட்சிபெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–